# இந்து சாதனம்.

# THE HINDU ORGAN.

(1889)

['ரேலிபோன்' இல. 56.]

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொலைப்பகுதி: " ரூ. 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ 10-00
" அரைக்கலம் ரூ. 5-00
" கால்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு வேறு விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சங. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்தி௵ புரட்டாதி௴ உ.கூஉ, (1931 ஒக்டோபர் 12உ) திங்கட்கிழமை. { இலக்கம்—உகூ.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த வியாகம மங்க லோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த மொனத்தர் திலுதா னங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றன் வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.




தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள
## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு ந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே கவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாள முள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y. 9 8 1—31 12 31.)


## ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள்வேண்டுநீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்கும் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமுற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைத்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமீபமாகிய வழியைத் திறந்து முந்நூற்றைம்பது படிவரையில்பலபெரியோர்களது முயற்சியினாலும், திரவியோபகாரசகாயத்தாலும் செவ்வனே கருங்கற் கட்டடமாய் கட்டப்பெற்றுள்ளது. எஞ்சிய கருங்கற் கட்டடத்திருப்பணியைமுற்றுவித்தற்குஇப்போது பொருளுதவிவேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ரவணா சங்கு சாது வசம் கொடுப்பது.

(H. Y. 9. 8-6&7 12-31)


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகோர்களுக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன சுகத்தைக்கருதியே இப்போதிந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரிக்கிறேன்

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, குமாரிநாசா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, கிஸ்தானை, சர்ப்பகுப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சண்டிராதிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் மிகுதிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, உருவருடித்தல் உஷ்ணசரீருக்கும் பக்கவாயு, இருமல், காசம் சித்தசுவாஸம், சித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் ருதுக வாய்வு, கர்ப்ப அறையில் உண்டாகும் ரோகங்கள் நீங்கி தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௧0. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொலைவாசிகளுக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவகுணசுரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ட்,
மட்டக்களப்பு,
சிலோன்.

(Y.75. 31-12-31.)



## திறம் கொழுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமுப்பர்
கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
கரம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா
வில்லூண்டி.

(H 12, 10-1 32.)



## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக் கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகக்கியாட்லாக் → இனம் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்

(Y 17. 7 9—8 9-32)



**Established 1909.** **A S. M. A. Khader Brothers**

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி
இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

துன்பமுறவரு நம்முயிரேயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணிவாராதளவில் தடுப்பதற்காகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணிகளால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனுர் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவீர்களாக.

நாதங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.
உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.
சிகரற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

## ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகற்பமுண்டாயிருக்கின் அவன் எவ்விதசந்தோஷத்திற்குரியவனாயினும் வீரியக்கெடுதலின் காரணார்த்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபுந் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதுவே, நபுஸகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விததுக்ககரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றுங்காணுத ஆனந்த சுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல துர்ச்செய்கைகளினால் சுடுப்பிராயத்தில் தேஹபலங்குன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயங்கிகிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் நாதமானது ஜலம்போல் நீற, கைகாலசதி மலசிக்கல், பசியில்லாமை, ஜீரணக்குறைவு, சித்திராபங்கமென்னும்ஸ்கலிதம், தரிதஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகஅனல் இடுப்புவலி, நீர்கடுப்பு, நீரெரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோகங்களையும், ரோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம், அப்படி இதில் சுருக்கமாய் காட்டியுள்ள குணாலத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி வேறு கிரயத்தை கொடுக்கத் தவறினால் கோட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம். மேலும் இம் மருந்தின் குணாலத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், நமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரையுமுள்ள நிவாரணைச் செய்துகொண்டு வாங்கலாமென்பதாயும் திண்ணமாய் கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சை 20 நாள் 40வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினால் வி. பி. தபால் செலவு இனமாய் அனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், இலங்கை, சிறம்பான், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய் நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால் செலவு ரூ 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வேறு பிறதேசவாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினால், பாக்கி தொகைக்கும் வி. பி. யில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைதுல் முஸ்லிமீன மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y. 15. 6-7-31—5-7-32.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஞு புரட்டாசிமீ உகூஉ திங்கட்கிழமை.

## ஒன்றை நினைத்துப் பிறிதொன்று செய்யற்க.

யாழ்ப்பாணத்தில் இக்காலத்தில் இங்குள்ளார் செய்யப்புகும் தருமவிஷயங்களோ, பொதுநன்மையான கருமங்களோ, அரசியற் சுதந்திரங்கள் சம்பந்தமானவைகளோ, மதுவிலக்கு விஷயமோ எவைகளும் பெரும்பான்மையும் ஆரம்ப சூரத்துவமாகி ஈற்றிற் பிரதிகூல மாகின்றனவேயல்லாமல் எவையாயினும் அநுகூலமடையக் கண்டிலேம். மேலும் தமிழ்மக்களாகிய நாம் முன்னர் இருந்த நிலைமையைக் காட்டிலும் வரவரக் கீழேபோகின்றேமேயல்லாமல் உய்யக் கருதுகின்றிலேம். அயலவர்களாகிய சிங்களர் நம்மை அலட்சியஞ்செய்கின்றனர். அரசினர் தமிழ்மக்களாகிய எங்களை இலட்சியஞ் செய்வதாகக்காணவில்லை. இங்ஙனம் தமிழ்மக்களாகிய எங்கட்குப் பிரதிகூலம் நேரக் காரணமென்னவென்பதை ஆவசியகம் ஆராய்தல்வேண்டும்.

எமது முதாதைகளாயுள்ள பெரியோர்களும் அபிமானிகளும் தருமவிஷயமாகவோ, பொது நன்மை விஷயமாகவோ அரசியற்சுதந்தரவிஷயமாகவோ எக்கருமத்தைச் செய்தாலும் மனமொன்று வாக்குமற்றொன்று செயல்பிறிதொன்றாகச் செய்தறியார்கள். தாமெடுத்த கருமத்தைத் திரிகரணங்களும் ஒத்து மிக்க அபிமானத்தோடு செய்துவந்தார்கள். இதனாற்றான் அவர்கள் அக்காலத் தெடுத்தகருமங்கள் இடையூறில்லாமல் இனிது நிறைவேறி அழியாப்புகழையும் புண்ணியத்தையும் அக்கருமகர்த்தர்கட்குதவி இன்றும் நிலவலாயின. இவ்வாறாகச் செய்து விளங்கியமகான்கள் பலரை நாம் இங்கே எடுத்துத் திருட்டாந்தமாகக் காட்டுதல் முடியும். இப்படியானவர்களுட் சிறந்தபெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களாவர். ஏனைய திருஷ்டாந்தங்களை இங்கே எடுத்துக்காட்டப்புகின் விரியும். இவர்கள் செய்துவந்த செயற்கருஞ் செயல்களே இவர்களது வழித்தோன்றல்களாகிய இக்காலத்துள்ள நம்மவர்க்கும் ஓரளவிற்கு மதிப்பைத்தரலாயின.

ஆனால் இக்காலத்திலெனிலோ இப்படியான தருமங்களையும் பொதுநன்மைக்காகிய கருமங்களையும் அரசியற் சுதந்தரங்களைப் பெறுதற்கான முயற்சிகளையும் நம்மனோர் செய்யப்புகும்பொழுதே நாம் மேலே சொல்லியபிரகாரம் மனத்திலொன்று வாக்கில் மற்றொன்று செயலிற் பிறிதொன்றாகவே செய்யத்தொடங்கிக் கொள்ளுகின்றனர்.

"கையொன்று செய்ய விழியொன்றுநாடக் கருத்தொன் றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழு, மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான், செய்கின்றபூசை யெவ்வாறு கொள்வாய்! வினைதீர்த்தவனே,"

என்றுபட்டினத்துப்பிள்ளையார் பாடியருளிய பிரகாரம் மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணங்களும் ஒத்துச்செய்யாக் கருமம் எவையும் பயன்படாவல்லவா? இங்குள்ளார் ஒருபொதுக்கருமத்தில் தாமாகவே ஆர்வங்காட்டி ஆரம்பத்திற் பங்குபற்றும்போது சிலர் பேர்புகழையும் இன்னுஞ்சிலர் பொருள்வருவாயையும் வேறு சிலர் செல்வாக்கு அதிகாரங்களையும் ஒழிந்தசிலர் இதிற் பங்குபற்றினால் நாம் செய்ய இருக்கும் இன்னொரு பெருங்கருமத்திற்கு எனக்கு இது துணையாகு மென்றெண்ணியும் அகத்துள் வைத்துக்கொண்டே செய்கின்றார்கள். இப்படிப்பட்டோர் ஒருபோதும் பொதுக்கருமங்களைச் செய்தற்கும் நிறைவேற்றுதற்கும் யோக்கியராகமாட்டார்கள். இவர்கள் ஒருகாலத்தும், உண்மையான அபிமானிகளாகவும் மாட்டார்கள். "உள்ளன்பிலாதபேர் தித்திக்கவேபேசி உறவாடும் உறவும் உறவோ" என்றவாறு இவர்கள் பேசும் அபிமானப்பேச்சும் வெளியே காட்டும் ஊக்கமும் பொதுமகளிரின் உபசரணைபோலல்லவா ஆகும். மாகாத்மாகாந்தி முதலிய பாரதப் பெருமக்கள் மனம் வாக்குக் காயம் ஒத்தும், தம்மையும் தம் பொருள் சுகம் முதலியவற்றையும் அர்ப்பணஞ் செய்தும், தம் உயிரைத் திரணமாக மதித்தும் நாட்டின் சுவாதீனத்தை வேண்டி இடையறாது உழைக்கிறார்கள். அவர்களெனிலோ தமக்கெனவாழாது பிறர்க்கென வாழும் பெரியோராவர். இப்படியான மகாத்மாக்கள் செய்யுங்கருமத்திற்கும் பூரணபயன் காலகதியிற்றான் வருமெனச் சொல்லவேண்டியிருக்கின்றது. இப்படியானால் நாம் மேலே சொன்ன பிரகாரம் அகத்தொன்று புறத்தொன்றாக நம்மவர் செய்வன எக்காலத்தாயினுங் கைகூடுமென நாம் காத்திருக்கலாகுமா? ஒருபோதுங்காத்திருக்கவொண்ணாது.

இங்குள்ளார் கருமங்கள் கைகூடாமைக்கு இடையூறாக நிற்கும் இன்னொரு தீமை அழுக்காறெனப்படும் பொறாமையேயாகும். தாமுஞ் சம்பந்தப்பட்டதாகிய ஒரு பொதுக்கருமத்திற்சம்பந்தப்பட்ட இன்னொருவர் தம்மைக்காட்டிலும் சிறிது சிரமப்பட்டு உழைக்க, அந்த உழைப்புக்காரணமாக அவருக்குப்பெயர்வர, இவர் அவர்மீது பொறாமை கொள்ளத்தொடங்க ஈற்றில் அவர்கள் சம்பந்தப்பட்ட பொதுக்கருமமே பங்கப்படுகின்றது. இவைமாத்திரமா நம்மவர்கள் பொதுக்கருமங்களின் பொறுப்பை ஏற்றவுடன் அவை பொதுக்கருமமென்பதையும் மறந்து நம்மைப்போல் மற்றவர்களும் பொது நலங்கருதித்தானே உழைக்கின்றார்களென்பதையும் மறந்து தமக்கு அந்தப் பொதுக்கருமத்திற் கிடைத்த நிலையற்ற அதிகாரத்தை ஸ்திரமான அதிகாரமென நம்பி மயங்கி இயன்றவரையில் தம்மதிகாரத்தை மற்றவர் மேற்செலுத்தப் பார்க்கின்றார்கள். இந்த எண்ணம் இருக்குமானாற் பொதுக்கருமங் கைகூடுவதெப்படி?

ஆதலினால் நம்மனோர்க்கு நாம் தொகுத்துச்சொல்வது எக்கருமத்தையும் தம் நயங் கருதாது பொதுநலங்கருதித் திரிகரணமும் ஒத்துச் செய்தாலன்றி யாழ்ப்பாணத்தில் எவ்வகையான நற்கருமமும் அநுகூலமுறுதல் அசாத்தியமாகுமென்பதாம். இவர்கள் இத்தீமைகளைவிட்டு நன்மைசெய்து நன்மை பெறுவது எந்நாளோயாமறியேம்.

## அதைப்பற்றி நினைக்கவேண்டாம்.

இலங்கையின் வரவு செலவுத் திட்டம் முதன்முறையாக இலங்கையின் அரசாங்கக் குறைச்சபையின் மந்திரிசபையாரால் திட்டம்பண்ணப்பட்டு இப்பொழுது அச்சபையில் விவாதம் நடைபெறுகின்றது. நாம் முன் கூறியவண்ணம் செலவு அதிகமும் வரவு மிகக் குறைவுமாகக் காணப்படுகின்றது. இப்படியாக நிகழுங் காலத்திலே வரவையுஞ் செலவையும் சமரசப்படுத்துவதற்குச் செலவைக் குறைத்துவிடுவதே மிக நன்மையான யோசனையாகும். இந்த நல்ல போசனையையே உலகத்திலுள்ள நாடுகள் யாவும் இப்போது கைக்கொள்கின்றன இப்போது உலகம் முழுவதும் வறுமைப்பட்டுவிட்டது. இரண்டொருதேசங்களைத்தவிர மற்றைய நாடுகள் யாவும் மிடியின் பிடியில் அகப்பட்டு மடிகின்றன. இந்த நிலைமையினின்றும் இலங்கை தவறிக்கொள்ளவில்லை.

ஆனால் நமது மந்திரிமார் வரவையுஞ் செலவையும் சரிப்படுத்தித் திட்டத்தைச் சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டனர். ஏனெனில், ஆங்கில அரசவர்க்கத்தினரின் கூற்றின்படி இப்போது இலங்கை 'சுயாதீன' ஆட்சியைப் பெறுகின்றதாம். அப்பணியைக் கைக்கொண்ட நமது 7 மந்திரிமாரும் எவ்விதவழியு மறியாராய்த் திகைத்துக் கடைசியாக இலங்கையரசாட்சியின் க்ஷேமநிதியிற் கொஞ்சம் சுருவினார்கள். இப்படிச் சுருவுதல் ஒரு மரத்தின் மூலவேரைத் தறிப்பதற்கொப்பாகும். பின் சிலபல தீர்வைகள் வரிகள் முதலான வருவாய்க்காகும் துறைகளையும் ஆராயத்தொடங்கினர். இப்படியாகத் தமக்கெட்டியவரையில், தமது தத்துவம் இடங்கொடுக்கக் கூடியவரையில் சரிபண்ணி வரவு செலவுத் திட்டத்தை முதன்முறையாக அரசாங்க சபைக்குச் சமர்ப்பித்தனர்.

அரசாங்க சபையின் சனப் பிரதிநிதிகளாயுள்ளார் இந்தத் திட்டத்தைப் பலமாகக் கண்டித்தனர். இப்படியாகக் கண்டித்த பிரதிநிதிகள் இதுவரையில் 30 பேர் வரையில் ஆய்விட்டனர். இப்பிரதிநிதிகள் யாவரும் உத்தியோகப்பகுதியினரின் வேதனங்களை இதரநாடுகள் குறைத்தமைபோலக் குறைப்பதுதான் யுக்தம் என வாதித்தனர். இவர்களின் வாதம் சரியானதேயாகும். சும்மா வாதித்தால்மாத்திரம் என்ன பிரயோசனம். இவர்கள் தமது அபிப்பிராயத்தைத் தொழிற்படுத்தக்கூடியவர்களா? தொழிற்படுத்தக்கூடிய தத்துவம் இவர்கட்குக் கொடுபட்டிருக்கின்றதா? இல்லையே.

இப்படியாகச் சனங்களினாற் தெரிவு செய்யப்பெற்றபிரதிநிதிகள்,—'சுயாதீன' அரசாட்சிகடத் தும்பிரதிநிதிகள்,—எமது இலங்கைச் சனப் பிரதிநிதிகள்—உத்தியோகத்தர்களின்சம்பளத்தைக் குறைக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்தைக் கூறிக்கொண்டேவர, சபையிற் பிரசன்னராயிருந்த அரசாங்கப் பிரதம காரியதரிசி—சேர் பேர்னாட் போர்டிலன்—எழுந்து, சம்பளம் குறைக்கிற வகைக்கு நாம விடமாட்டோம், இலங்கையில் வரிகள் விதிக்கப்படவேண்டிய உச்ச எல்லைக்கு இன்னும் அவை விதிக்கப்படவில்லை, அந்த உச்ச எல்லை வரும்வரைக்கும் வரியை விதியுங்கள், வருமான வரியை அவசியம் உண்டாக்கவேண்டும், அப்படி அவ்வரி விதிக்கப்பெறின் நாங்களும்—உத்தியோகத்தர்களும்—வருமானவரி கொடுக்கத்தானே வேண்டும், என்று கூறிவிட்டனர்.

சனப்பிரதிநிதிகள் யாதுசெய்வார்கள். இந்தக் கடைசித்தீர்ப்பை அழிக்க யாரால் முடியும் நாம் முன்பு திருப்பித்திருப்பிக் கூறியவாறு அரசாட்சி செய்பவர்கள் அந்த மூன்று ஆங்கிலேய உத்தியோகத்தர்களும் தேசாதிபதியுமல்லவா? சனப்பிரதிநிதிகள் சாட்சி பூதங்கள் தாமே. காட்சிப் பொருள்களாய் வெளியே யுள்ளோர்க்குச் சனவாட்சிபோலத் தோற்றுவதற்காக அமைக்கப்பட்ட சிருட்டிகளல்லவா இவர்கள்!

இரண்டாம் முறையுங் கன்னத்தில் அறைந்தாற்போல அரசாட்சியிலுள்ள அதிகாரவர்க்கத்தினர் சனப்பிரதிநிதிகளிடம் யாதொரு தத்துவமும் கொடுபடவில்லையென்பதைக் காட்டிவிட்டனர். மூன் ஐரோப்பிய உத்தியோகத்தரும் அவர்களின் பெண்டுபிள்ளைகளும் வசதியாகத் தத்தம் நாடுகளுக்கு விடுமுறை பெற்றுச் செல்வதற்காக வழங்கப்பட்ட லட்சக்கணக்கான ரூபாய்க்கு மேலதிகமாக 50000 ரூபா வேண்டுமென்ற பிரேரணை சனப்பிரதிநிதிகளினால் நிராகரிக்கப்பட்டபோது, தேசாதிபதி அப்படிக் கொடுப்பதுதான் சட்டம் என்று தமது 'பரம அவசிய' தத்துவத்தின்படி சட்டமாக்கினர். இப்போது பிரதமகாரியதரிசி, மற்ற நாடுகள் உத்தியோகத்தரின் வேதனங்களைக் குறைத்தாற் குறைக்கட்டும் நீங்கள் எங்களின் சம்பளத்தைப்பற்றிப் பேசவுங்கூடாது என்றனர்.

எமதுநாட்டுச்சகோதரரான அரசாங்க சபை அங்கத்தவர்கட்குப் புத்தி சனிக்கும் நாளுமொன் றுண்டாமோ?

## டக்டர் அம்பட்காரின் அகம்பாவம்.

வட்டமேசைச் சமாஜத்திலே தாழ்த்த வகுப்பினரின் பிரதிநிதியாக அரசாட்சியாரால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட இத்தாழ்த்த வகுப்புப் பிரதிநிதியார் வட்டமேசைச் சமாஜத்திலே மஹாத்மா பொருத்தத்தை மீறினர் என்னும் குறையைக் கூறி அரசினர் தெரிவு செய்யாவிட்டாலும் தாழ்த்த வகுப்பினரை ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்யும்படி விட்டால் அவர்கள் தம்மையே தெரிவு செய்தனுப்புவார்களென்றும் கொக்கரித்தனர்.

இந்தத் தாழ்த்தவகுப்புப் பிரதிநிதியார் மஹாத்மாவிற் கண்டுபிடித்த 'குற்றம்' மஹாத்மா, இப்போது வட்டமேசைச் சமாஜத்திற்கு வந்திருக்கும் பிரதிநிதிகள் சனங்களினாற் தெரிவுசெய்யப்பட்டு சனங்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் கொண்டுள்ளவர்களாக மதிக்கப்படவேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அரசாட்சியார் இவர்களை தெரிவு செய்தமையினாலேயேயாம்; என்று கூறினமையேயாகும். இந்தக் கூற்றைக் கண்டிப்பதற்கு மற்றைய சிறுபான்மைக்கட்சிப் பிரதிநிதிகள் எவரும் முன்வரவில்லை ஏனெனில் அக்கூற்றிலுள்ள உண்மை எவ்வளவென்றும், அதன்பிரயோகத்தின் பலன் எவ்வாறாகுமென்றும் மற்றையோர் தெரிந்துகொண்டனர். இந்த அம்பட்கார் தெரிந்துகொள்ளாது கொதித்தமை நூதனமல்ல. இவ் வட்டமேசைச் சமாஜம் ஆரம்பிப்பதற்குமுன், இவ்வளவுபிரபல்யம் தமக்குண்டென ஆரவாரிக்கும் இவரை அறிஞர் உலகம் அறியாதிருந்ததென்றே நாம் கூறத் துணியலாம். ஒருபோது தாழ்த்த வகுப்பினர் அறிந்திருக்கலாம். ஆனால் மஹாத்மா, எத்தனையோவருடங்களுக்குமுன் அறிந்த உலகத்தில் இந்த அம்பட்காரும் சிவித்திருக்கவேண்டுமென்பதற் கையமில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் பிரதிநிதியாக மஹாத்மாவையோ அம்பட்காரையோ அவர்கள் தெரிவு செய்வார்கள் என்பதைச் செயல்முறையில் விட்டுப் பார்த்தாற்றான் தெரியும். 'நிறைகுடம் நீர்தளும்பலில்'

## நாணய ஐக்கியசங்கக்கைப்புத்தகம்.

இப்புத்தகத்தின் புதியபதிப்பு விலைக்கிருக்கின்றது. வேண்டியவர்கள் யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் இருக்கும் உதவிப்பதிவுகாரரின் உத்தியோகஸ்தானத்திற் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா1, தபாற்செலவு பிரத்தியேகம்.

C, ரகுநாதன்,
ஐக்கிய நாணயசங்க
வடமாகாண, கிழமாகாண
உதவிப்பதிவுகாரன்.

(Mis 583 12)

## ஆப்த வாக்கியங்கள்.

### சனசமூக சம்பந்தமானவை.

மஹாத்மா காந்தி கூறியன.

நீண்டாமையை விடாதவனுக்கும் இந்தப் பிரித்தானிய அரசாங்கத்தைக் கண்டிக்க யோக்கியமில்லை. எவன் சமத்துவத்தை விரும்புகின்றானோ அவன்தான் முதற் சமதத்துவத்தை எல்லாரிடத்தும் பாராட்டி நடக்கவேண்டும்.

* * *

இந்திய அரசினர் எங்கள் மானத்தைத் திருடிவிட்டார்கள்; எங்கள் சமயத்தைக் கெடுத்துவிட்டார்கள்; இந்த அரசினர் வைத்து நடத்தும் வித்தியாசாலைகளிலேனும், இவர்கள் உதவிபெறும் வித்தியாசாலைகளிலேனும் எங்கள் குழந்தைகள் கல்வி பயில்வது பெரிய பாவமாகும் என்பதே எனது அபிப்பிராயம்.

* * *

எங்கள் குழந்தைகள் குடிசைகளிலிருந்தும் மரங்களின் கீழிருந்தும் சுயாதீன உணர்ச்சியுள்ள உபாத்தியாயர்களிடத்திற் கல்விபயில்வதே உத்தமம். ஏனென்றால் அப்படிப்பட்ட உபாத்தியாயர்கள் சுயாதீனவுணர்ச்சியைப் பிள்ளைகட்கூட்டுவார்கள்.

* * *

இப்பொழுது ஊட்டப்படும் அந்நிய கல்வி எங்கள் புராதன முறையைத் தவிர்த்து அந்நியமுறையிலேயே ஊட்டப்படுவது. அக்கல்வி மனத்தின் விருத்தியையுங் கைத்தொழிலையுங் கெடுத்து மூளையளவிற்றான் கட்டுப்பட்டிருக்கிறது.

* * *

வேறு எவரிடத்திலும் எங்களிடத்திலிருப்பதுபோன்ற அந்நிய சாஸ்திரங்களில்லையெனலாம் ஆனால் அப்படியிருக்கின்றனவென்பதை நாங்கள் அறியாமலிருக்கிறேம். எங்கள் அருமையான சாஸ்திரங்களை அலட்சியஞ் செய்வதற்கான கல்வியே இப்பொழுது எங்களுக்கு ஊட்டப்படுகின்றது

* * *

எங்கள் சமயம் பிறசாஸ்திரங்களை அலட்சியஞ் செய்யவொண்ணாது நிந்திக்கவொண்ணாது என்று கற்பிக்கின்றது. அப்படியே எங்கள் சாஸ்திரங்களையுந் தவறாமற் கற்கவேண்டுமென நமது சமயங் கட்டளையிடுகின்றது.

* * *

நாங்கள் வியபிசாரத்திற்குரிய வீடுகளை எவ்வகையிலும் அங்கீகரிப்பதில்லை. கள்வரைக் களவுசெய்ய இடங்கொடுப்பதில்லை. ஆனால் மதுபானத்திற்கு நாங்களாகவே இடங்கொடுக்கிறோம். களவு வியபிசாரம் என்ற இவைகளைக் காட்டிலும் மதுபானம் மகா கொடியது.

## காந்தித்திருநாட் கொண்டாட்டம்.

8—10—31ல் கண்டி, தமிழகமண்டபத்தில், ஸ்ரீ மா. செல்வத்தம்பி (பிறக்டர்) அவர்களின தலைமையில் மஹாத்மாவின் பிறந்ததினக் கொண்டாட்டக் கூட்டம் நடைபெற்றது.

## யாழ்ப்பாண ஐக்கிய நாணய சங்கத்திய பண்டசாலை.

நிகழும் 31—10—31 சனிக்கிழமை சாயந்தரம் 3 மணியளவில் மேற்படி சங்கத்தின் பிரதம அங்கத்தவர்களின் கூட்டம் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் கூடும். அத்தருணம் இச்சங்கவமைப்பின் உபவிதிகள் பரிசீலனை செய்யப்படும், என அறிவிக்கப்படுகின்றது.

## தண்டவாளத்திலோடும் ரதத்திற்கு றப்பர் வளையம்.

பிரான்ஸ் தேசத்திலே தண்டவாளத்திலே ஓடும் மோட்டர் ரதம் பரீட்சை பார்க்கப்பட்டது. அந்த ரதத்தின் சிற்களுக்கு றப்பர் வளையங்கள் (டையர்) போடக்கூடிய விதமாக அமைப்பு உண்டாக்கப்பட்டிருக்கின்றது. இது மணிநேரம் ஒன்றுக்கு 87 மையில்வீதம் ஓடியதாம்.

## கோவிற் பராமரிப்பு அறிவிப்பு.

அராலி வடக்கு மண்டையர்றிடலென வழங்கும் பதியில் வீற்றிருக்கும் வீரகத்திப்பிள்ளையார்கோவிலுக்குப் பாரம்பரியாகப் பூசகரும், பராமரிப்புக்காரருமாக இருந்து பரிபாலித்துவரும், சிவசங்கரக்குருக்கள், ஐயாத்துரைக்குருக்களாகும் என்னிடமிருந்து, இக்கோவிலின வளமை உரிமையையும், ஆட்சியையும், ஊரவர்கள் தம் அபிப்பிராயப்படி நீக்கிக்கொள்ளப் பலமுறைகளிலும் ஆரம்பிப்பதால், இக்கோவிலுரிமைக்குத் தத்துவகாரர் யாரோ? அவர் தம் சாதனவுரிமையோடு முறைபோல் வந்து பெற்றுக்கொள்ளும்படி இதனால் யாவருக்கும் அறிவிக்கின்றேன்.

சிவ. ஐயாத்துரைக்குருக்கள்,
அராலி-வடக்கு.

(Mis 582, 12&15&'9.)

## ஐப்பசி ஓணவிழா.

இவ்விழா திருமயிலாப்பூரில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் பண்டைக் காலத்தில் நடைபெற்றதுண்மையென்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளனவென்று கோயமுத்தூர் வளக்கறிஞர் சைவத்திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் தெரிவிக்கிறார்கள். முதல் இராஜராஜ சோழன் இருபத்து நான்காம் ஆட்சியாண்டில் (கி. பி. 1009) உண்டான திருவீழிமிழலைக் கல்வெட்டில் ஐப்பசி ஓணவிழாவுக்காக வரும் அடியார்களை ஒப்புவதற்குரிய செலவுகளைப் பற்றிய விபரங்கள் உள்ளனவாம். மற்றொரு கல்வெட்டில் அவ்விழாவில் திருப்பதிகம் ஓதவேண்டுமென்று அவ்வாசன கட்டளையிட்டதாக உள்ளதாம். திரு. செட்டியார் அவர்கள் இவ்விஷயத்தையும் பொதுவாகத் திருவிழாக்கள் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள விவரங்களையும் தொடர்ச்சியாகச் "சித்தாந்தம்" வாயிலாக வெளியிட ஒப்புக்கொண்டுள்ளார்கள். அவர்கட்கு நமது நன்றி என்றும் உரியதாகுக. —சித்தாந்தம்.

## சிறுபான்மைக் கட்சியாளரின் ஒத்துழையாமை.

### மஹாத்மாவின் ஸ்திரநிலை.

நகர், 9-10-31.

சொற்பநேரம் சம்யுக்தராச்சியவமைப்புச் சங்கம் லோட் ஷாங்கியின் அக்கிராசனதிபத்தியத்திற்கூடி பின் செவ்வாய்க்கிழமை கூடுவதற்குத் தவணைபோடப்பட்டது. அப்பொழுது, தனுதிகாரச்சகத்தின் அறிக்கையையும் அதன்பின் சம்யுக்தராச்சிய நீதிமன்ற அமைப்பைப் பற்றியும் பரிசிலனை செய்யப்படும்.

சிறுபான்மைக் கட்சியாளர்களின் சங்கப்பிரிவு ஒரு தீர்மானத்தையடைய முடியாமற்போனதைப்பற்றி லோட் ஷாங்கே விசனமடைந்தபோதிலும், எல்லோரும் இந்த வட்டமேசைச் சமாஜம் நல்ல முடிவு அடையவேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருப்பதினால், தாம் மனஅசதியடையவில்லையென்றும், சம்யுக்தராச்சிய அமைப்புப் பிரச்சினை ஆலோசிக்கப்படவேண்டியதேயென்றும் கூறினர்:

சிறுபான்மைக் கட்சியாளரின் பிரச்சினைகளைப்பற்றியவரையில், இனிமேல் அவற்றைப் பற்றிய தீர்மானம் யாது என்ற விசாரணையைவிடுத்து அவற்றைப்பற்றி தீர்மானம் அடையும் வழிவகைகள் யாவையென்பதை ஆராய்வதே பிரயோசன முடையதாகும் என லோட் ஷாங்கே புத்தி கூறினர்.

சேர் முகம்மது ஷாவ்வி அந்தக் குறிப்புரையை அங்கீகாரம்பண்ணினர். ஆனால் மஹாத்மா சம்யுக்தராச்சிய வமைப்புத்திட்ட ஆராய்ச்சியை நடத்தும்படி தூண்டினர்.

திங்கட்கிழமை வேறு காரியார்த்தமாக லோட் ஹாங்கி சபைத்தில் அக்கிராசனம்வகிக்க முடியாதிருப்பதினால் அடுத்த கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெறவேண்டியது தவிர்க்கப்பட முடியாததாகின்றதென, சேர் செஜ் பகதூர் சப்புரு, கூறினர்.

இந்தக் குறிப்பை சேர் சல்வறு லாகான் அநுவதித்தனர்.

## அன்புக்கு வசப்படாதார் யார்?

### காந்தியடிகளிடத்தில் மரியாதை.

### பிரிட்டிஷாரின் உற்சாகம்.

ஸ்ரீமான் மகாதேவ தேசாய் லண்டனிலிருந்து எழுதியுள்ள ஒரு கடிதத்தில் பின்வருமாறு கூறுகிறார்:—

பம்பாயில் காந்தியடிகள் வந்திறங்கினால் அங்கு சனங்கள் அவரைத் தரிசிக்க எப்படித் திரள் திரளாகக் கூடிக் காத்துக்கொண்டிருப்பார்களோ அப்படியேதான், கிங்ஸ்லி மண்டபத்திலும் காலை முதல் இரவு வரை ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடிக்கொண்டிருக்கிறார்கள். ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் ஆகிய அனைவரும் நூற்றுக்கணக்காக நின்றுகொண்டு, 'எப்பொழுது காந்தியடிகள் வரப்போகிறார்' அவரை எப்பொழுது பார்ப்போம்' என்று ஆவலுடன் நிற்கிறார்கள். நாங்கள் வெளியே செல்லத் தொடங்கினால், குழந்தைகள் எங்களுடன் தொடர்ந்து வருகின்றன. எங்களுடன் சிநேகிதம் செய்து கொள்ள வேண்டுமென்பதே அவைகளின் நோக்கம், ஸ்ரீமான் தேவதாஸ் காந்தியைப் பார்த்து "உங்கள் தகப்பனார் எப்பொழுது இங்கிலாந்து மன்னரைப் பார்க்கப்போகிறார்"? என்று ஒரு குழந்தை கேட்கிறது "எங்களைப் போல்தான் உங்கள் தேசத்திலுள்ள குழந்தைகளும் இருக்கின்றனவா"?என்று இன்னொன்று கேட்கிறது. 'இவர்களுடைய உடையைப் பார்த்தால் மிகவும் விநோதமாயிருக்கிறது" என்று ஒரு சிறு பெண் தன் தோழியிடம் கூற, அத்தோழி "நாமும் அவர்களுக்கு விநோதமாகவே இருப்போம்" என்று பதில் சொல்கிறது. "உங்கள் சிஜர் எங்கே"? என்று மற்றொரு பையன் குறும்பாகக் கேட்கிறான். —(பிஜார்-காற்சட்டை)

காந்தியடிகள் இங்கிலாந்து சென்றபிறகு, அவரிடத்தில் எல்லாக் கட்சியாரும் அன்புடனேயே நடந்துகொண்டு வந்திருக்கின்றனர். ஒரு காலம் அவருக்கு விரோதமாயிருந்த பத்திரிகைகள் இப்பொழுது அவரைப்பற்றிப் படங்கள் முதலியன வெளியிட்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல, சாதாரண சின்னஞ்சிறு

சாமான் விற்பவர்களும், மற்றெல்லாப் பாமர சனங்களும், காந்தியடிகளின் மோட்டார் வண்டி நின்றதும் அவரைப் பார்க்கவேண்டுமென்று கும்பல் கும்பலாகக் கூடிவிடுகிறார்கள். இவரைப் பார்த்தவுடன் புன்சிரிப்புடன் கைகொட்டி ஆரவாரம் செய்கிறார்கள்.

தவிர, ஐரோப்பா கண்டத்தின் பல பாகங்களிலிருந்தும், காந்தியடிகளுக்கு வரவேற்பு அளித்து அவருடைய கொள்கை சித்தியாகுமாறு பிரார்த்திப்பதாக ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன அடிகள், இங்கிலாந்தில் மாணவராயிருந்த காலத்தில் அவருடன் பழகிய பல பழைய நண்பர்கள், அவருடைய நட்பை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள அவரை வந்து கண்டு பேசிவிட்டுப் போகிறார்கள். இங்ஙனம் வந்து பார்ப்பவரில் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் பலரும் உண்டு. ஒருநாள் அடிகள் மௌனவிரதத்தை அநுஷ்டித்துக்கொண்டிருந்தார் அப்பொழுது ஸர்ஜ ர்ஜ்பல்ஸ் என்பார் அவரைப்பார்த்து, வேறொன்றும் பேசாமல் அவருடன் கைகுலுக்கிவிட்டு வெளியே வந்தார். வெளியே வந்தபோது "அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறினர். ஞாயிற்றுக்கிழமைகளில் தங்கள் இடம் வந்து தங்கும்படி பல இடங்களிலிருந்து அழைப்புக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன

### நன்கொடை.

ஓர் அன்பர் ஐம்பது பவுனுக்குச் செக்கொன்று அனுப்பிப் பின்வரும் கடிதமொன்றையும் அனுப்பினர்:—

சென்ற சனிக்கிழமை 'நண்பர்கள் சங்க' கூட்டத்தில் நீங்கள் நிகழ்த்தியசொற்பொழிவையும், அமெரிக்காவுக்கு ரேடியோ மூலம் அனுப்பியசெய்தியையும் நான் மிகுந்த உற்சாகத்துடன் படித்தேன். அவைகளில் அடங்கிய கருத்துக்கள் மிகுந்த அழகாகவும், பரந்த நோக்க முடையனவாகவும் இருக்கின்றன உலகத்திலுள்ள எல்லாரும் அவைகளை அறிந்து நடப்பார்கள் என்று நம்புகிறேன் இந்தியா விஷயத்தில் நான் நீண்டகாலாகக் கவனஞ் செலுத்தி வருகிறேன் ஐரோப்பிய யுத்தகாலத்தில், இங்கே ஆஸ்பத்திரிகளில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த புத்த வீரர்கள் டாக்டர்கள் முதலியவர்களை உபசரித்திருக்கிறேன் உங்களிடத்திலும் உங்களுடைய உபதேசங்களிலும் எனக்கு அனுதாபம் இருக்கிறதென்று காண்பிக்கும் பொருட்டு இதனுடன் அனுப்பியிருக்கும் தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்வகட்சி மகாநாட்டில் நீங்கள் பிரசன்னமாயிருப்பதானல் அதன் வேலைகள் சுலபமாக முடியும் என்று நான் கருதுகிறேன்." (வரும்)

## நவராத்திரி ஆராய்ச்சி.

சைவாபிமானிகளே,

இச்சப் பிரசோற்பத்தி வருடத்தில் வரும் நவராத்திரியைத் தென்னிந்தியா திருநெல்வேலிப் பஞ்சாங்க கணிதர் திருவாளர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், "நிகழும் பிரசோற்பத்தி ஆண்டிலே நவராத்திரி ஆரம்பம் ஆவணி௴ 27-ந் உ சனிக்கிழமை. மகாநவமி புரட்டாதி௴ 4-ந் உ ஞாயிற்றுக்கிழமை. விஜயதசமி புரட்டாதி௴ 5-ந் உ திங்கட்கிழமையே. இவ்வாறு நவராத்திரி விழாவைக் கொண்டாடுவதே, சிவாகம சாஸ்திரங்களுக்குப் பொருத்தமானது. மகாநவமியையும் விஜயதசமியையும் ஐப்பசி மாசத்திற் கொள்ளக்கூடாது" என்று தமது பஞ்சாங்கத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் மற்றைய பஞ்சாங்க கணிதர்கள், புரட்டாதி௴ 26-ந் உ திங்கட்கிழமையாகிய ஆஸ்வீஜசுத்தத்தில் நவராத்திரி பூசாரம்பமும், ஐப்பசி௴ 3-ந் உ திங்கட்கிழமை மகாநவமியும் 4-ந் உ செவ்வாய்க்கிழமை விசயதசமியும் கொள்ளவேண்டுமென்று தத்தம் பஞ்சாங்கங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இவ்விஷயத்திலே சிலர் தத்தம் அபிப்பிராயங்களை இந்த சாதனத்தில் எழுதியிருக்கின்றார்கள், நானும் வெ. பிள்ளையவர்கள் வெளிப்படுத்திய ஆகமப் பிரமாணங்களைக்கொண்டே எனது அபிப்பிராயத்தை இந்துசாதன மூலமாய் வெளிப்படுத்துகிறேன்.

பிள்ளையவர்கள் முதற்காட்டிய பிரமாணம், காமிகாகமம் "கன்யா விதப் பிரதமா மாரப்ய நவம்யந்த மூமாவிரதம்" (புரட்டாதி மாசத்தில் பூர்வபக்கப் பிரதமை முதல் நவமி முடிவாய நவராத்திரிஉமாதேவியின் விரதமாம்) என்பதே.

இதையே பூர்வகாரணாகமம் "அதாதஸ் சம்பிரவக்ஷ்யாமி நவராத்திரி விதிக்கிரமம், ஆஸ்வயுக் சுக்லபட்சேது பிரதிபந் நவம் யந்தகே, பிரதிபத் தினமாரப்ய வ்ரதோத்ஸவம் சமாசரேத்" (இனி நவராத்திரிக் கிரமத்தைச் சொல்லுகிறேன். ஐப்பசி௴ சுக்லபட்சத்துப் பிரதமை முதல் நவமி முடிவாயுள்ள ஒன்பது நாளிலும், பிரதமை தொடங்கி விரதத்தையும் உற்சவத்தையுஞ்செய்க) என்று கூறுகின்றது. இந்த இரண்டு பிரமாணங்களையும் பார்க்கும்பொழுது, நவராத்திரி புரட்டாதி மாசத்தில் ஆஸ்வீஜசுத்தமாகிய 26-ந் உயே ஆரம்பிக்கவேண்டும் என்றாகிறது. இதனால் மற்றைக் கணிதர்கள் கொண்டதுவே ஆகமசித்தமென்பது வெளிப்படையாகிறது.

இனி, இந்த இரண்டு பிரமாணமும் தங்கொள்கைக்கு மாறானவையென்றெண்ணி அவற்றைத் தங்கொள்கைக்கு ஆக்கும்படி பலாத்காரமாக இழுக்கத் துணிந்து வெ. பிள்ளையவர்கள் எழுதியதாவது:—

இதில் ஆஸ்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியாம், சாந்திரமான ஐப்பசி பெரும்பாலும் புரட்டாதியிலேயே (பிரதமை முதல் நவமி முடிய) வருமாதலால் இந்த வாக்கியம் தோன்றியது. இதனால், இதைச் சௌரமான ஐப்பசி என்றாவது அல்லது சாந்திரமான ஐப்பசி என்றாவது மயங்கிவிடக்கூடாது. சந்திரப் பெயராக இங்கே கூறப்பெற்ற ஆஸ்வயுக் சௌரமானப் புரட்டாசியையே உணர்த்தும் என்றார். இந்த ஆஸ்வயுக் என்றபதம் ஐப்பசியை உணர்த்துமேயன்றி அவசிய நிமித்தம் பட்சபாதமாக வலிந்திழுத்தாலும் புரட்டாசியையுணர்த்தாது. அமரசிங்கர், நாமலிங்கானுசாசன மென்னும் நிகண்டிற் புரட்டாதிக்கு "நபஸ்ய: பிரௌஷ்டபத: பாத்ர: பாத்ரபத" என்பவையே பெயராகுமென்றும் ஐப்பசிக்கு "ஆஸ்வின: இஷ: ஆஸ்வயுஜ" இவை பெயரென்றும் குறித்திருக்கின்றார். இதனால், ஆஸ்வயுக் என்பது புரட்டாதியை உணர்த்தாது. சித்திரை முதல் 12 மாசங்களுக்கு வழங்கிவரும் பெயரெல்லாம் சாந்திரமான மாசப்பெயரே. "சாந்திரமாசஸ்து தத்தத் மாச சுக்லபக்ஷ பௌர்ணமாசி யுக்த தத்தத் நட்சத்திர பிரதான பூத பௌர்ணமாசி மத்தியே பரிவர்த்தமானு அமாவாசியாந்தஸ்ச" அதாவது, (சாந்திரமாசமாவது சௌரமாசத்திலே சுக்லபட்ச பூரணையோடு கூடிய அவ்வந் நட்சத்திரத்தையே பிரதானமாக உடைய பூரணையை நடுவில் உடையதும், அமாவாசியை அந்தத்தில் உடையதுமானது. பூரணை வரும் நட்சத்திரத்தின் பெயரே அவ்வம்மாசப் பெயராக வழங்கி வருகின்றது. ஐப்பசிமாசத்தில், அஸ்வினியிற் பூரணை வருதலால், அம்மாசம் அஸ்வயுக் எனப்படும். விசாகநட்சத்திரத்திலே பூரணை வருதலால் வைகாசியை வைசாகமெனப்படும். பூரட்டாதி, உத்தரட்டாதிகளிலே பூரணை வருதலால், புரட்டாதி பாத்திரபதமெனப்படும். இப்படியே மற்ற மாசங்கட்கு வந்த பெயர்களும் சாந்திரமான மாசப்பெயர்களே. இதனால், ஆஸ்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசிமாதத்தை உணர்த்துமேயன்றிப் புரட்டாசியை உணர்த்தாது.

காமிகாகமம் நவராத்திரிவிதி கூறுமிடத்து, "சௌரமாஸேந கர்த்தவ்யா நவராத்திரிர் விசேஷத: சாந்திரமாஸே நகர்த்தவ்யாகிருதஞ்சேத் ராஷ்டிர நாசனம்" (நவராத்திரியைச் சௌரமானத்திலேதான் செய்தல்வேண்டும்; சாந்திரமானத்திற் செய்யக்கூடாது; செய்தால் நாடு அழியும்) என்று இவ்வசனத்தை வெ. பிள்ளையவர்கள் காட்டியிருக்கின்றார்கள். இது, முற்கூறிய காமிகாகம வசனம் பூர்வகாரணாகம வசனங்களுக்கு மாறாயிருக்கின்றதேயெனில், மாறாகாது. எங்ஙனமெனில், உத்தராயணத்திலே மாசி முதலிய ஆறு மாசங்களும் சௌரமானமென்றும், சாந்திரமானமென்றும் பெயர் பெறுமென்றும், தெட்சணாயனத்திலே ஆவணி முதலிய ஆறுமாதங்களும் அவ்விருவகைப்பெயர்களைப் பெறுமென்றும், மாசிமாதம்எப்பொழுது மகரசூரியனோடு கூடியதோ அப்போது சௌரமானத்தாற் சிறந்ததென்றும், மாசி௴ எப்பொழுது கும்பரவியுடன் கூடியதோ அப்போது சாந்திரமானத்தாற் சிறந்ததென்றும், இவ்வாறே எல்லா மாசங்களுக்கும் சௌரமான சாந்திரமானங்கள் கொள்ளத்தக்கனவென்றும், இன்னும் மாசி முதலிய மாதங்களுக்கு மகரம் முதலிய பெயர்களும் வருமென்றும், திரிலோசன சிவாசாரியார் சித்தாந்த சாராவலி சரியாபாதத்திற் பவித்திரோற்சவ விதி கூறுமிடத்து "அர்க்கே யுக்குமகதே கரிர் கிஜநிதௌ சேதேவிதாயாம்" என்னும் சுலோகத்திற்கு அகோர சிவாசாரியார் இயற்றிய வடமொழி வியாக்கியானத்தில் இந்தச் சாந்திரமான சௌரமான நிர்ணயங்களை நிச்சயாசகாரிகை, வாஹடக்கிரந்தம், அமரநிகண்டு, ஆத்திரேய சங்கிதை முதலிய நூற் பிரமாணங்களைக் கொண்டு விரிவாக விளக்கியிருக்கின்றார். இப்பிரமாணங்களை எழுதில் விரியும் என்று விடுக்கின்றேன். வேண்டியவர்கள் அந்நூலிற் பார்த்துத் தெளிவாராக.

இங்ஙனமாதலால் ஆச்வீஜ சுத்தப் பிரதமை முதல் சத்தமி அந்தமாகிய தினங்கள் கன்னிரவியில் வருதலால் சௌரமானத்தினுற் சிறந்ததென்றும், அட்டமி நவமி என்னும் இரண்டு தினமும் துலாரவியில் வருதலால் சாந்திரமானத்தற் சிறந்ததாயினும் ஐப்பசிக்கு கன்னிமாதம் என்னும் பெயர் சிறப்பு விதியாற் பெறப்பட்டதாதலின் சௌரமாசக் கொள்கை யுடையனவென்றும் அறியக் கிடக்கின்றன. ஆகவே,

காமிகத்தில் "கந்யாவிதப் பிரதமாமாரப்ய" என்று விதித்தலினாலும், பூர்வகாரணாகமத்தில், "பிரதிபத்தினமாரப்ய" என்று விதித்தலினாலும் நவராத்திரிக்கு ஆரம்பமே பிரதானமென்றும், அந்தம் அப்பிரதானமென்றும் அறியக் கிடக்கின்றது.

நவராத்திரி, உற்சவத்திற் சேர்ந்ததாதலால் "உற்சவத்திற்குத் தீர்த்தமே பிரதானம்" என்றும்; "சமுத்திர தீர்த்தம் திதிப் பிரதானம" "மற்றையவற்றின் தீர்த்தம் நக்ஷத்திரப் பிரதான" மென்றும், "தீர்த்த தினத்தை முதலில் நிச்சயித்து அதற்குமுன் 10, 12, 13, 14, 15, 18, 27 என்னும் நாட்களில் உற்சவம் ஆரம்பிக்கவேண்டும்" என்றும் ஆகமங்கள் விதித்தலினால் உற்சவத்திற்குத் தீர்த்தம் பிரதானம். அதுபோல நவராத்திரிக்கு மகாநவமியே பிரதானம் என்றும் அதற்குமுன் ஒன்பது இரவை எடுத்துக்கொள்ளவேண்டும்என்றும்பிள்ளையவர்கள் கூறியது போலாகாது, பிரதமையில் ஆரம்பிக்கவேண்டும் என்று ஆகமங்கள் கூறியதே இதற்குச் சான்றாம்.

ஆகவே புரட்டாதி௴ 26உ திங்கட்கிழமை நவராத்திரி ஆரம்பிப்பதே காமிகம் காரணம் முதலிய ஆகமங்களுக்குச் சம்மதமாம். மற்றைப் பஞ்சாங்க கணிதர் நியமித்த இதுவே எனக்கும் சம்மதமானது. பாத்திரபத சுத்தத்தில் ஒரு நாளும் நவராத்திரியை விதியாமையினாலும் காமிக பூர்வகாரண வசனங்கள் ஆஸ்விஜ சுத்தத்திலே நவராத்திரியை விதித்தமையினாலும் பிள்ளையவர்கள் கொண்ட ஆவணி௴ 27உ தொடங்கி புரட்டாதி 4உ முடிவாகக்கொண்ட நவராத்திரி ஆகம சம்மதமாகாது.

மேலும் பிள்ளையவர்கள் காமிகாகமத்தில் துர்க்காபூசாவிதி படலத்தில் "கந்யாகதே சம்தரி சுக்லபக்ஷேஷ்டமீயுதா மூலநக்ஷத்திர சமியுக்தா ஸமஹா நவமீஸ்மிருதா" (கன்னிராசியிலே சூரியனிருக்கும்போது சுக்கிலபக்ஷ அட்டமி யுடனும் மூல நக்ஷத்திரத்துடனும் கூடிய நவமி எதுவோ அது மகா நவமி என்று நினைக்கப்பட்டது; என்னும் வசனத்தைக்கொண்டு 'புரட்டாசியில் மகா நவமி இருக்கவேண்டும் என்றும், "நவமி, மகா நவமி எனப் பெயர் பெற்றது போலப் பிரதமையும் மகாப் பிரதமை எனப் பெயர் பெறவில்லை" என்றும், "அதனால் அது அப்பிரதான" மென்றும், "நவராத்திரியில் மகா நவமியே பிரதானம்" என்றும் கூறி இதற்கேற்ப புரட்டாதி 4உ மகா நவமியைக் குறித்து நவராத்திரி ஆரம்பத்தைத் தமது யுத்தியினால் முன்னுள்ள பிரதமையிலே வைத்துப் பதிதாக ஒரு சிருட்டி செய்திருக்கின்றார்கள். இவர்கள் தாம்முன் காட்டிய காமிகவசனத்தையும் பூர்வகாரண வசனத்தையும் மறக்கின்றார்கள். உலகத்தவர் ஒரு நாளாகிய மகாநவமியை மாத்திரம் கொண்டாடுவதைக்குறித்துப் பிரதமையை அப்பிரதானம் என்கிறார்கள். கோயில்களிலும் பெரிய இடங்களிலுந்தான் நவராத்திரி ஒன்பது நாளும் விழாக் கொண்டாடப்படுகிறது என்கிறார்கள். இவற்றை ஆராய்வதில் பிரயோசனம் இல்லையென்று நிறுத்துகிறேன்.

இச்சுலோகத்துக்கு அடுத்த சுலோகம், அச்வயுச்சுக்லபக்ஷ வா அட்டமீமூலசம்யுதா ஸமகாநவமீநாம்னாத்ரைலோக்யேப்யதிதுர்லபா (அல்லது ஐப்பசி மாசத்துச் சுக்கிலபக்ஷ அட்டமியும் மூலமும் கூடிய நவமி மகாநவமியென்று பெயர் பெறும். இது மூவுலகத்தும் கிடைத்தற்கரியது) என்று கூறிப் புரட்டாசியில் வாராவிடின், ஐப்பசியில் இப்படி வந்தால் அதுவும் மகாநவமி எனப்படும் என்று இதுமூவுலகத்துங் கிடைத்தற்கரியது என்கிறது. இதனால் மகாநவமி ஐப்பசியிலும் வரும் என்று கூறப்பட்டது. பின் எட்டாஞ் சுலோகம் "அஷ்டம்யாஞ்ச நவம்யாஞ்ச ஜகன்மாதரமம்பிகாம் பூசயித்வாச்வயுங்மாஸி விசோகோஜயதிவிஷ;ஸர்தர்ச்சயுதிஹாங்காரை: கட்கோத்காதகராண்பரான்" (அரசன் ஐப்பசிமாசத்திலே அட்டமியிலும் நவமியிலும் தேவியைப் பூசித்துச் சோகமின்றிப் பகைவரை வெல்லுகிறான். வாளை உயர்த்திக்கொண்டு வெட்டவரும் பகைவரை உங்காரத்தினால் உறக்கிச் சயிக்கிறான். இப்படியே இப்படலத்தில் அரசனுக்கு வெற்றி உண்டாகும் பொருட்டு யானை குதிரை வாள் குடை சாமரம் சங்கு சிங்காசனம் முதலிய எவற்றுக்கும் பூசையை விதிக்கிறது. இதனால் இப்படலம் அரசருக்குச் சிறப்பு விதியாகக் கூறப்பட்டது. அரசர் முதலிய எல்லோருக்கும் தேவர்களுக்குமாகக் காமிகாகமத்தில் நவராத்திரிவிதிப்படலம் விதிக்கப்பட்டது. நவராத்திரி விதிப்படலம் விதித்ததே துர்க்காபூசாவிதிப்படலம் அரசருக்குரியதென்பதைப் புலப்படுத்தும். மகாநவமியைப் புரட்டாதியிற் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திய பிள்ளையவர்கள் அட்டமியும் மூலமும் கூடிய நவமிதினமாகிய மகாநவமியை மூன்றாந்தேதி குறியாது நாலாந்தேதி குறித்ததும் அவர்கொள்கைக்குக் குற்றமானதே.

11-10-31

அ. அருணாசல சாஸ்திரிகள்,
சங்கானை மேற்கு.
யாழ்ப்பாணம்.

## சிவவாக்குத்தானு.

ஐயோ கலியுகமே!

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார் வெளிப்படுத்திய ஓர் புத்தகங் கண்டனம். அதிலே, "சௌசிகப் பிரஸ்ந குமாரதந்திரம்" என்னும் நூலில் உள்ளனவாகச் சில சுலோகங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு:

"அதாத சம்பிரவக்ஷ்யாமி
ஸ்கந்தஷஷ்டி விதிம்ஸ்ருணு
நவாஹஞ்சாபி சப்தாஹம்
ஷஷ்டாஹஞ்ச திரியாஹகம்

அதவாதத் திநேவாபி
சோத்ஸவஞ்சை மாசரேது
துலாயாம் ரவிசம் பிராப்தேன
சுக்லபக்ஷ விசேஷத:

ஷஷ்டியந்தம் உத்சவம் கிருத்வா
சர்வமாலோக காரயேது
காரயேது யதிமோ ஹோ
கர்த்தா போக்தா விநஸ்யதி

உத்ஸவா ரம்ப காலேது
துவிமாஸம் ஸம்பவேத் யதி
நதோஷ இதிவிக் யாத:
ஸ்கந்தஷஷ்டி துலா ரவௌ

துவிவாரே கண்டிதே நித்யாம்
ராத்ரௌ வியாபி விசேஷத:
திவா வியாப்தம் நகர்த்தவ்யம்
கிருதஞ் சேது கர்மநாசனம்"

இச்சுலோகங்களையாராயுமொருட்டு அநேக ஏடுகளை யாராய்ந்தோம், புத்தகங்களை யாராய்ந்தோம், காணப்படவில்லை.

பிறவும் இதுபோலவே என்பதற்குப் பிறிது சான்றும்வேண்டுமோ? கந்தபுராணத்தில் "சொற்படு துலையின் திங்கட் சுக்கில பக்கந் தன்னின், முற்பக லாதியாக மூவிரு வைக னோற்றார்" என்பது எவர்க்குமெளிற் புலப்படவும், முதனூல்களும் அவ்வாறிருக்கவும் இவற்றைக் கவனியாது, புரட்டாதியிற் றொடங்கி, ஐப்பசியில் ஷஷ்டி கொள்ளும்படி நியமித்ததை வலியுறுத்தும்படி இச்சுலோகங்கள் எழுந்தன என்பதே துணிபு. பிறவும் இவ்வாறே ஆவணியில் நவராத்திரி தொடங்கும் விதியையும் காணுமே

இங்ஙனம்,
சைவசாஸ்திர விநோத சமுதாயர்,
யாழ்ப்பாணம்.

## சுக்கிரோதய தர்சனம்.

சுக்கிரன், (வெள்ளி) வாக்கிய பஞ்சாங்கங்களின்படி ஐப்பசி௴ ௩௨ உதயமாதுமென்றும், திருக்கணித பஞ்சாங்கப்படி புரட்டாதி மாசம் ௨௬௨ உதயமாதுமென்றும், சுக்கிர உதயத்தை நேரிற்பார்த்து எப்பஞ்சாங்கத்தின் படி தர்சனம் கிடைக்கக் கூடியதாய் இருக்கிறதோ அப்பஞ்சாங்கத்தைக் கைக்கொள்வது விசேடமென்றும், அநுராசபுரம் ந. கனகசபை என்பவர் இந்துசாதனம் ௨அ-ம் இலக்கப் பத்திரிகையில் எழுதியிருந்தார். நான் பார்த்தபோழுது இந்நாட்களில் (புரட்டாதி௴ ௨௬௨ தொடக்கம்) சூரியஅஸ்தமனம் நிகழ்ந்தவுடன் மேற்றிசை அடிவாரத்தின் மேல் சுக்கிரன் சிறிது நோக்கக்குக் காணப்படுகின்றது. அன்றியும் சடந்த புதன், வியாழன், உதயங்களும் திருக்கணிதப் படியே சரியாகத் தோற்றியதென்பதை நேரில் காணுதவர்கள் சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் கண்டுகொள்க.

குறித்த கனகசபை யென்பவர் அவ் வியாசத்தில் "குரு சுக்கிரர்களின் உதயாஸ்தமன காலமுதல் ஐந்துதினங்கள் பாலவிருத்தத்துவம்" என்றெழுதியிருந்தார். அஃது "குரு சுக்கிரர்களின் உதயத்துக்குப் பின் ஐந்துநாள் பாலியமென்றும் அஸ்தமனத்துக்கு முன் ஐந்து நாள் விருத்தத்துவமென்றும்" என இருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன்.

14-10-31, வண்கிழக்கு. — S. பொன்னுத்துரை, ஆசிரியன்.

---

### தந்த வைத்திய விளம்பரம்.

டக்ரர் ஜே. எஸ். ஆர். குணவர்த்தன.

தந்தவைத்தியன்——பாக்தெரு, கொழும்பு.

யாழ்ப்பாணம் பாடிவீட்டில்

ஒக்டேபர்௴

16-ம், 17-ம், 18-ம், 19-ம்திகதிகளில்

நோயாளரைப் பார்ப்பர்.

(Mis 309. 12)

---

காசி பட்டாடை

சுதேசத்துணிகளின் ஆதரியுங்கள்

புதிய செட்லாக் இரும்!

கே.எஸ்.முத்தையா கம்பெனி

சில்க் அவுஸ், காசி.

(Y. 19 28 9 31 to 27-9-32.)

---

## வீட்டுப்பாவிப்புக்கு உபயோகமுள்ள பொருள்கள் 8.

—சொற்பசெலவுடன்
—சுகத்தைப்பாதுகாப்பதற்கு
—உபயோகமுள்ளன.

## வி ஓ பா மருந்துப் பெட்டி

—அடங்கியுள்ளன-விட்டில்ஸ் ஒறி
—யன்ரல்பாம், உளைவு குத்துகளுக்
—குத்திறமான மாற்றும் மருந்து.
—குளைப்பன், மலேறியா, காச்சல்
—கட்குத்திறமான 'ஹென்றீஸ்' ஜவ
—எஹரி ஹென்றீஸ் ஒமம்-கர்ப்
—பூர், வயிற்றுக்குத்து, சமியாக்
—குணம், வாந்திபேதி முதலிய
—வயிற்றிருத்தகுச்சு சுகக்கொடுப்
—பது. ஹென்றீஸ் இல்லா-கோல்ட்
—ஜலபா இருமலவில்லைகள், இரு
—மல்கள், சுவாசக்குழலைப்பற்றிய
—ரோகங்கள் முதலியவற்றிற்கு
—இலேசான மருந்து. வி ஓ பா
—லக்ஸா ரப்லெற்ஸ், மிகவும் அபாய
—மற்றபேதிமாத்திரை வி ஓ பா
—சர்மரோகசமரக்ஷணி, வெட்டு
—காயம், உரஞ்சல்முதலியவற்றிற்கு
—வேண்டியவை வி. ஒ பா. மண
—மாற்றி, ஈச்சுக்காற்றைச்சுத்தி
—கரிப்பதி லாச்சரியப்படத்தக்கது

இதன் விலை 4

அதாவது.

ரூ. 3 அணு 8.—மேற்குறித்த பொருள்கள் அடங்கிய ஒருபெட்டியை மருந்துப்பொருள் வியாபாரியிடம் வாங்குதற்குப் போதியது.

முத்திரைச் செலவுவேறு.

விட்டில்ஸ்

ஒறியன்ரல்பாம் டிப்போ,

பெரியதெரு,

மணிக்கூட்டுச்சந்தி,

கொழும்பு.

அல்லது

விட்டில்ஸ் ஒறியன்ரல் பாம், அன்ட், பாமசியூடிக்கல் லிமிடட்,

தால்பெட்டி இலக்கம் 67.

சென்னபட்டணம்.

(Y. 9.—1 31—12 32 B)

---

# முன்னறிக்கை.

அநேகருடைய வேண்டுகோட்கிணங்கி,

## இலங்கை நூல் நூற்கும், நெசவுசெய்யும் சங்கம்

(சிலோன் ஸ்பின்னிங் அன்ட் வீவிங் கம்பெனி லிமிட்டெட்.)

## தீபாவளிக்கு இரண்டுவாரங்கட்குமுன் பின்னுமொருமுறை, புடைவைக்காட்சி யாழ்ப்பாணத்தில் நடத்துவர்.

புதுமாதிரியான

சேலைகள்! வேட்டிகள்! சால்வைகள்.

இவைகளெல்லாம் விசேட அமைப்புடன் ஆக்கப்பட்டவைகள்.

இக்காட்சி:—எப்பொழுது, எந்த இடத்திலென்பது பின்னுல் அறிவிக்கப்படும். அறிவித்தலை எதிர்பாருங்கள்.

## சுதேசிப்புடைவைகளை வாங்குவதற்கு இது ஒரு நல்ல தருணம்.

(Y. 20. 12 10 31— )

---

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டகைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 8-ம் நெம்பர் காசுக்கடைவீதி வே. த வெற்றிவேற்பிள்ளை சிதம்பரப்பிள்ளை & தம்பிப்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1930-ம் ஆடி 3-ம்௴

| இல. | உ | ரூ | ச. | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 3304 | 1 | 18 | | பழைய நடு சறடு 1 |
| 3317 | 1 | 18 | | தாலிக்கொடி 1 |
| 3319 | 1 | 6 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 3327 | 2 | 44 | | பட்டக்காப்பு சோடி 1 |
| 3341 | 2 | 8 | | வளையல் தகடு 6 |
| 3395 | 8 | 6 | 50 | தோடு சோடி 1 |
| 3415 | 9 | 6 | | சிறு பின் 1, இமிற்கல் காதோலை சோடி 1 |
| 3427 | 10 | 14 | 04 | பத சவுக்கமணிக்கோர்வை 1க்கு மணி 22 |
| 3429 | 10 | 10 | 04 | வெ பழைய பாதசரம் சோடி 1 சரை 1 இல்லை |
| 3432 | 10 | 8 | | வெ அடுக்குக்காப்பு சோடி 1 |
| 3439 | 11 | 30 | | பட்டக்காப்பு சோடி 1 |
| 3475 | 15 | 36 | 04 | சிரசப்பூவுடன் 6 பட்டு மணி 1 எ இ |
| 3479 | 15 | 7 | | வெ தண்டை சோடி 1 |
| 3486 | 15 | 15 | | கைச்சங்கிலி 1 ச இ |
| 3505 | 16 | 10 | | கடு 1 |
| 3619 | 24 | 8 | | மோதிரம் 1 |
| 3620 | 24 | 50 | 04 | கல் பென்டன் 1 |
| 3629 | 25 | 22 | 04 | பொட்டு பிறையுடன் பொன் கொடி 1 முடியல் 1 |
| 3638 | 25 | 45 | 04 | பொட்டு பத சங்கிலி அட் |
| 3647 | 27 | 11 | | சவுக்கமணி 1க்கு மணி 22 |
| | 4-ம்௴ | | | |
| 3706 | 1 | 50 | | பத சம்பிப்பூரான் அட்டியல் 1 ச இ |
| 3707 | 1 | 20 | | பதஉட்கட்டு1க்கு தட்டு23 |
| 3708 | 1 | 22 | | தங்கப்பவுண் 1, குவை பவுண் 1 |
| 3709 | 1 | 10 | | வெ தண்டைசோடி 1 ச இ |
| 3710 | 1 | 16 | | வெ பாதசரம் சோடி 1 |
| 3711 | 1 | 10 | | வெ பாதசரம் சோடி 1 சரை 1 இல்லை |
| 3766 | 5 | 45 | | பட்டக்காப்பு சோடி 1 சசி |
| 3787 | 6 | 11 | | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 3855 | 10 | 12 | | திருகுபூ 1, வெ எஸ் கறளை சோடி 1 |
| 3871 | 11 | 6 | 04 | செருகுதோடு சோடி 1 |
| 3873 | 11 | 11 | 04 | ½பவுண் பொத்தான் 1 |
| 3877 | 11 | 37 | | கடுடன் சங்கிலி 1 மூடி முறியல் |
| 3885 | 12 | 10 | | வெ அடுக்குக்காப்புசோடி 1 |
| 3890 | 12 | 65 | 04 | 5பட்டு மணி 1 |
| 3907 | 12 | 10 | | கைவிலங்கு 1 |
| 3921 | 14 | 8 | 04 | கலாவளை மோதிரம் 1 |
| 3981 | 18 | 8 | | மோதிரம் 1 |
| 3983 | 18 | 25 | | குண்டுச்சங்கிலி 1 கொ இ |
| 4024 | 20 | 6 | | வெ கறளை சோடி 1 |
| 4032 | 21 | 5 | 50 | சற்றோடு சோடி 1 |
| 4033 | 21 | 6 | | அச்சமுடன் படக்கர் 1 அச்சம 1 இல்லை |
| 4036 | 21 | 65 | | பூக்காப்பு சோடி 1 |
| 4052 | 22 | 50 | | மணிக் கோர்வை 1க்கு மணி32, பத சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 31 |
| 4053 | 22 | 18 | | வெ பாதசரம் சோடி 1, வெ குழற்காப்பு சோடி 1 |
| 4112 | 26 | 30 | 04 | 2பட்டுக் கைச்சங்கிலி 1 |
| 4119 | 27 | 40 | | சங்கிலி அட்டியல் 1 |
| | 5-ம்௴ | | | |
| 4174 | 3 | 30 | | சம்பிப்பூரானட்டியல் 1 |
| 4175 | 3 | 25 | | பொற் கடையம் 1 |
| 4176 | 3 | 12 | | வளையல் 8 |
| 4177 | 3 | 10 | | வளையல் 8 |
| 4180 | 3 | 80 | | சிரசப்பூவுடன் 7பட்டு மணி 1 |
| 4181 | 3 | 20 | | ஐந்தபட்டு மணி 1 |
| 4184 | 3 | 7 | | வளையல் 7 |
| 4192 | 4 | 13 | | முறுக்குக்காப்பு சோடி 1 |
| 4195 | 4 | 50 | | பட்டக்காப்பு சோடி 1 |
| 4199 | 4 | 15 | | மணியட்டியல் 1 ச இ |
| 4228 | 5 | 8 | | இதழ் திருகுபூ 1 |
| 4229 | 6 | 20 | | நடு பத பொன் பூரானட்டியல் 1 |
| 4233 | 6 | 25 | 04 | பழைய 1 பட்டிலைமாலை 1 |
| 4248 | 8 | 16 | | வெ பாதசரம் சோடி 1 |
| 4251 | 8 | 10 | | சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 20 |
| 4253 | 8 | 6 | | சிறு இதழ்பூ 1 |
| 4268 | 8 | 21 | | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 |
| 4271 | 9 | 9 | 04 | கடு 1 |
| 4290 | 11 | 6 | | பொன் தோடு சோடி 1, கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 4300 | 12 | 6 | | சிறு மோதிரம் 1, வெ பழைய கறளை சோடி 1 |
| 4314 | 13 | 8 | | வெ அடுக்குக்காப்பு சோடி 1 ச இ |
| 4328 | 14 | 13 | 04 | இ சிகப்புக் கடுக்கன் சோடி 1 ச இ |
| 4336 | 14 | 6 | | வெ குழற்காப்பு சோடி 1 |
| 4338 | 14 | 40 | | தங்கஅரைஞாண் 1 கொ இ |
| 4357 | 15 | 42 | | பத பொட்டுடன் இருக் கொன்றை ½மணிக் கோர்வை 1 |
| 4376 | 17 | 10 | | தங்கக்காப்பு சோடி 1 பூ முறியல் |
| 4384 | 18 | 6 | | மோதிரம் 1 |
| 4404 | 19 | 7 | | தங்கக்காப்பு சோடி 1 |
| 4406 | 19 | 40 | | சம்பிப்பூரானட்டியல் 1 |
| 4436 | 21 | 41 | | பீலிக்காப்பு சோடி 1 |
| 4440 | 22 | 10 | | குவை தங்கப்பவுண் 2 |
| 4448 | 23 | 10 | | வளையல் 8 |
| 4456 | 23 | 10 | 04 | இ காதோலைசோடி 1 ச இ |
| 4509 | 29 | 40 | 04 | சம்பிப்பூரானட்டியல் 1 |
| 4515 | 27 | 8 | 04 | பவுண்காப்பு சோடி 1 |
| 4517 | 27 | 75 | 04 | பத சங்கிலி அட்டியல் 1, சவுத்தோர் 1 |
| 4538 | 29 | 25 | 04 | குவை தங்கப்பவுண் 1, கொளுக்கியுடன் தங்கக் காப்பு சோடி 1 |
| 4547 | 31 | 10 | 04 | ஒட்டுவளையல் 5, தகடு 1 |
| 4549 | 31 | 13 | 04 | சவுத்தோர் 1 |
| | 6-ம்௴ | | | |
| 4601 | 5 | 30 | | 6பட்டு மணிக்கோர்வை 1 |
| 4604 | 5 | 65 | | 5 பட்டிலை மாலை 1, சிறு கடு 1 |
| 4617 | 6 | 13 | | பழைய தாலிக்கொடி 1 |
| 4621 | 6 | 20 | | பூவேலை செய்த ½ டலர் 1 |
| 4623 | 7 | 15 | 25 | பத சவுக்கமணிக்கோர்வை 1க்கு மணி 27 |
| 4628 | 7 | 16 | | வெ பாதசரம் சோடி 1 |
| 4650 | 8 | 25 | | சிறு சம்பிப்பூரான் அட்டியல் 1 ச இ |
| 4665 | 9 | 20 | 04 | தாலிக்கொடி 1 |
| 4677 | 9 | 12 | | வளையல் 8, ஒட்டு வளையல் 6 பூ இல்லை |
| 4679 | 9 | 20 | | சங்கிலி 1 கொ இ |
| 4712 | 11 | 40 | | செடிக்காப்பு சோடி 1 ச இ |
| 4717 | 12 | 20 | 04 | தாலிக்கொடி 1 |
| 4721 | 12 | 8 | 04 | புரோச்சு 2 |
| 4727 | 12 | 10 | 04 | ஒட்டுவளையல் 6 |
| 4752 | 14 | 25 | 04 | சவுத்தோர் 1, புரோச் 1 |
| 4758 | 14 | 10 | | குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 4762 | 14 | 11 | | தங்கமோதிரம் 1 ச இ |
| 4772 | 15 | 5 | 50 | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 4795 | 16 | 40 | | சம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 4798 | 16 | 40 | 04 | செடிக்காப்பு சோடி 1 |
| 4799 | 16 | 30 | 04 | உலக்குத்து 20 |
| 4829 | 18 | 5 | 50 | பொத்தான் ½பவுண் 1 |
| 4857 | 21 | 9 | | செருகு தோடு சோடி 1, படக்கர் 1 பில்லை |
| 4878 | 22 | 75 | | பூக்காப்பு சோடி 1 முசப் |
| 4879 | 22 | 9 | | முறச்சுக்குத்திக் கொடி 1, கடு 1 |
| 4886 | 23 | 45 | | சிறு பீலிக்காப்புச் சோடி 1 |
| 4905 | 24 | 35 | | வேலைசெய்த பவுனுடன் சங்கிலி 1 |
| 4908 | 24 | 13 | 04 | ஆனைமயிர் கைவிலங்கு 1 |
| 4913 | 25 | 8 | 04 | இ கல் சவுத்தோர் 1 |
| 4919 | 25 | 6 | 54 | கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 4920 | 25 | 6 | 04 | சிறு திருகுபூ 1 |
| 4927 | 26 | 45 | | பட்டக்காப்பு சோடி 1 |
| 4934 | 26 | 21 | | பட்டக்காப்பு 1 |
| 4944 | 27 | 10 | | மோதிரம் 1 |
| 4946 | 27 | 27 | | சங்கிலி 1 |
| 4982 | 30 | 14 | 04 | ஒருகல் செவ்வந்தித் தோடு சோடி 1 |

விற்பனவு:—பிரசோற்பத்தி௵ ஐப்பசி௴ 14-ந்திகதிக்குச்சரியான (30-10-31) வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட சகை பிறகேக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,

(Mis 380 8&12) — வெக்கின்மேன்தர்.

---

ஆண்டைப்பத் தனத்தின் அரசன்.

ஹொரஹு நூல் புடவை வெளியீடு.

ஒ ரே ரே வ ளை யி ல் பாட்டைசபார்க்கலாம்.

[illegible]

20கஜம் 40வேலை டப்பி 1க்கு விலை ரூ 4 00 — 10கஜம் 20வேலை டப்பி1க்கு விலை ரூ 2 25

[illegible]

கேட்லாக் இலவசம்.

K. V. Vappadurai & Co, Forbonove B I.

(Y. 18. 28 9 31 To 27 9 32)

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed & published by S. ADCHALINGAM, residing at Ayanarkoviladу, Van: West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna. at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.